සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Cristiyanity

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 8	**கிறிஸ்தவம்**

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

01. திபேரியாக் கடலில் மீன்பிடித்த சீடர்களில் உயிர்த்தெழுந்த இயேசுவை முதலில் இனங்கண்டு கொண்டவர்.
1. பேதுரு 2. அந்திரேயா 3. யாக்கோபு 4. யோவான்

02. 1915 இல் முதலாம் உகல மகாயுத்தத்தில் பாதிக்கப்பட்டோருக்காக "சமாதான இல்லம்" என்ற அமைப்பை உருவாக்கியவர்.
1. அன்னை தெரேசா 2. இவ்லின் கார்னி
3. டொனால்ட் கனக ரத்தினம் 4. எலிசா எக்னிவ்

03. பார்த்தலமேயுவை இயேசுவுக்கு அறிமுகம் செய்தவர்.
1. யாக்கோபு 2. பேதுரு 3. பிலிப்பு 4. தோமா

04. இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் எத்தனை வருடங்கள் அடிமைகளாக வாழ்ந்தனர்?
1. 450 வருடங்கள் 2. 430 வருடங்கள்
3. 400 வருடங்கள் 4. 700 வருடங்கள்

05. இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்தில் பெற்றுக்கொண்ட உணவு.
1. பாண் 2. ரொட்டி 3. அப்பம் 4. மன்னா

06. "இது முதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்" என இயேசு யாரைப் பார்த்து கூறினார்?
1. யோவான் 2. யாக்கோபு 3. பேதுரு 4. அந்திரேயா

07. "என்னைப் பின்பற்றி வா" என இயேசு யாரைப் பார்த்து கூறினார்?
1. பவுல் 2. மத்தேயு 3. யூதா 4. யாக்கோபு

08. இயேசு தொழுகை கூடத்தில் எந்த இறைவாக்கினரின் சுரள் ஏட்டை வாசித்தார்?
1. எரேமியா 2. எசேக்கியேல் 3. மீக்கா 4. எசாயா

09. "ஜெபத்தின் ஆசிரியர்" என்ற பட்டப்பெயரை பெற்றவர்.
1. ஜொயிஸ் த சில்வா 2. எலிசா எக்னிவ்
3. இவ்லின் காணி 4. மேரி ஜோன்

10. பேதுருவின் சகோதரர் யார்?
1. யாக்கோபு 2. யோவான் 3. அந்திரேயா 4. பிலிப்பு

11. "நல்லாயன் நானே நல்ல ஆயர் ஆடுகளுக்காக தம் உயிரைக் கொடுப்பார்" என்ற வாக்கியம் எவ் வேதப் பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது?
1. யோவான் 3 : 21 2. யோவான் 7 : 10
3. யோவான் 1 : 5 4. யோவான் 10 : 11

Past Papers Wiki

12. ரத்மிவல விவசாயக் கிராம மக்களுக்கு சேவையாற்றிய குருவானவர் யார்?
1. திஸ்ஸபாலசூரிய
2. குமாரகே
3. சோமசிறிகுமாரதாஸ்
4. டொனால்ட் கனக ரத்னம்

13. "ஆண்டவரே என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுத்து விடுகிறேன்" என இயேசுவிடம் கூறியவர்.
1. பவுல்
2. பேதுரு
3. நூற்றுக்கதிபதி
4. சக்கேயு

14. இஸ்ரயேலரின் இறைவாக்கினரும், நீதித்தலைவியுமாக செயற்பட்டவர் யார்?
1. அன்னாள்
2. ரெபேக்கா
3. தெபோரா
4. எஸ்தர்

15. இஸ்ரயேல் மக்களின் துணையுடன் 52 நாட்களில் மதிலைக் கட்டி முடித்தவர் யார்?
1. எஸ்ரா
2. எரேமியா
3. தெகேமியா
4. தானியேல்

16. தனது வேலைகளை ஒரு புறமாய் வைத்து இயேசுவின் பாதத்தில் இருந்து இறைவார்த்தையைக் கேட்பதற்கு ஆசைக் கொண்ட பெண்,
1. மார்த்தாள்
2. மரியாள்
3. யோவன்னா
4. சூசன்னா

17. ஆதி பிதாக்கள் பாவத்தில் விழுந்ததனால், இழந்தது?
1. புகழை
2. இறை பிள்ளை
3. நித்திய வாழ்வை
4. ஏதேன் தோட்டத்தை

18. இயேசுவானவர் சிறு பிரயாயத்தில் வளர்ந்தது?
1. கலிலேயா
2. சமாரியாவில்
3. பெத்தானியா
4. நாசரேத்தில்

19. இஸ்ரயேல் மக்களை எகிப்தில் இருந்து மீட்டு வாக்களிக்கப்பட்ட தேசத்தை நோக்கி வழிநடத்தி செல்ல இறைவன் யாரை அழைத்தார்?
1. ஆபிரகாம்
2. மோசே
3. தாவீது
4. யாக்கோபு

20. இயேசுவுக்கு எத்தனை சீடர்கள் (திருத்தூதர்கள்) இருந்தனர்?
1. 9 பேர்
2. 10 பேர்
3. 12 பேர்
4. 14 பேர்

(2 x 20 = 40 புள்ளிகள்)

பகுதி – II

- **முதலாம் வினா கட்டாயமானதாகும். முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

01) சுருக்கமான விடை எழுதுக.
1. இவ்லின் கார்னி அமைத்த இல்லங்கள் இரண்டு தருக.
2. இஸ்ரயேல் மக்கள் வாழ்வை கட்டியெழுப்ப எஸ்ரா ஆற்றிய பணிகள் இரண்டு தருக.
3. ஆவியின் கனிகள் இரண்டு தருக.
4. இறைவாக்கினர்கள் எபிரேய, கிரேக்க மொழியில் எவ்வாறு அழைக்கப்படுவர்?
5. குலமுறுவர்கள் இருவரின் பெயர்களை தருக.
6. பஞ்சாகமத்தில் அடங்கியுள்ள நீதிச் சட்டங்கள் இரு பிரிவுகளை கொண்டது. அவை எவை?
7. மேய்ப்பனிடம் காணப்பட வேண்டிய பண்புகள் இரண்டு தருக.
8. சீடர்களை திருப்பணிக்கு அனுப்பும் போது வழங்கிய அறிவுரைகள் இரண்டு தருக.
9. இயேசு வாழ்ந்த காலத்தில் யூத சமுதாயத்தினால் ஒதுக்கப்பட்ட மக்கள் பிரிவினர் இரண்டு தருக.
10. நீர் ஆலய வழிபாட்டில் செய்யக்கூடிய உதவிகள் இரண்டு தருக.

(2 x 10 = 20 புள்ளிகள்)

02) 1. வளர்ந்து வரும் இஸ்ரயேல் மக்களை கட்டுப்படுத்துவதற்கு பார்வோன் எடுத்த நடவடிக்கைகள் இரண்டு தருக.
2. பார்வோனிடமிருந்து விடுதலையாகி வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு பயணம் செய்யும் போது இறைவன் மக்களை பாதுகாத்த சந்தர்ப்பங்கள் மூன்று தருக.
3. இன்று இறைவன் உமக்கு பாதுகாப்பு அளித்த சந்தர்ப்பங்கள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

03) 1. இயேசு கிறிஸ்து தமது முதல் திருப்பணி போதனைக்காக பயன்படுத்திய இறைவாக்கு சுருளேடு எது?
2. மேற்கூறப்பட்ட இறைவாக்கு சுருளேட்டின் கிறிஸ்துவின் திருப்பணியை குறித்து கூறப்படும் விடயங்கள் 3 தருக.
3. நீர் கிறிஸ்துவின் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடிய சந்தர்ப்பங்கள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

04) 1. இறந்தவர்களை இயேசு உயிர்ப்பித்த சம்பவங்கள் இரண்டு தருக.
2. இயேசு பெண்கள், சிறுவர்கள் மேல் அக்கறை காட்டிய சந்தர்ப்பங்கள் மூன்று தருக.
3. இன்று சிறுவர்களுக்கு ஏற்படும் துன்பங்கள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05) 1. ஆபிரகாம் என்ற பெயரின் அர்த்தம் யாது?
2. இறைவனிடம் இருந்து ஆபிரகாம் பெற்றுக்கொண்ட வாக்குறுதிகள் மூன்று தருக.
3. முற்பிதாக்கள் மூவரிடம் வெளிப்பட்ட பிரதான பண்புகளை தனித்தனி குறிப்பிட்டு விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

06) 1. இஸ்ரயேல் சமூகத்தில் இறைவாக்கினர் ஆற்றிய பணிகள் யாவை?
2. இறைவாக்கினர் எரேமியா கண்ட காட்சிகள் யாவை?
3. எரேமியாவின் அழைப்பில் நாம் பெறும் வழிகாட்டல்களை குறிப்பிடுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

07) 1. நல்லாயனின் பண்புகள் இரண்டு தருக.
2. இயேசுவை நல்லாயனாக குறிப்பிடுவதற்கு ஏதுவான காரணங்கள் மூன்று தருக.
3. நீர் இயேசுவை பின்பற்றுபவராக இருப்பதனால் உமது மேய்ப்பத்துவ பணி என்ன என்பதை 5 காரியங்கள் கொண்டு விபரிக்க.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை –2025 **பாடம்** - கிறிஸ்தவம்

Christian விடைப்பத்திரம் - தரம் - 8

பகுதி – I

1. 4
2. 2
3. 3
4. 2
5. 4
6. 3
7. 2
8. 4
9. 2
10. 3
11. 4
12. 4
13. 4
14. 3
15. 3
16. 2
17. 3
18. 4
19. 2
20. 3

பகுதி – II

(01)

1. -
   - சிறுவர்களுக்கான மகிழ்ச்சியின் இல்லம்.
   - வயோதிபர்களுக்காக சந்தியா நிலையம்.
2. -
   - ஆலயத்தை கட்டியெழுப்பல்.
   - இஸ்ரயேல் மக்களின் ஆன்மீக வாழ்வை சரியான நிலைக்கு கொண்டுவர முயற்சித்தல்.
3. அன்பு, பொறுமை
4. -
   - எபிரெய மொழியில் - நபி
   - கிரேக்க மொழியில் - ப்ரொபெடெல்
5. ஆபிரகாம், ஈசாக்கு
6. -
   - பத்துக் கட்டளைகள்
   - பத்துக் கட்டளை விட இணைக்கப்பட்ட வேறு நீதி சட்டங்கள்.
7. பாதுகாத்தல், போஷித்தல்.
8. -
   - பணப்பை கொண்டு செல்ல கூடாது.
   - இரண்டு அங்கிகள், மிதிபடி, கைத்தடி ஒன்றும் கொண்டு செல்ல கூடாது.
9. வரி அறவிடுவோர், பெண்கள்
10. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

(02)

1. -
   - கடுமையான வேலைக்கு அமர்த்துதல்.
   - ஆண்பிள்ளைகளை கொலை செய்தல்.
2. -
   - பகலில் மேகஸ்தம்பம், இரவில் அக்கினி ஸ்தம்பம் வழி நடத்தினர்.
   - குடிப்பதற்கு பாலைவனத்தில் தண்ணீர் கொடுத்தார்.
   - உணவுக்காக மன்னா, காடைகளை கொடுத்தார்.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

(03)

1. ஏசாயா
2. -
   - ஏழைகளுக்கு நற்செய்தி
   - சிறைப்பட்டோருக்கு விடுதலை
   - பார்வை அற்றோருக்கு பார்வை
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

අ.පො.ස [illegible] ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් [illegible] Past Papers Wiki [illegible] පිවිසෙන්න

(04)

1. - நயீன் ஊர்க் கைம் பெண்ணின் மகன்
   - லாசரு, யாயீரின் மகள்
2. சமாரிய பெண், மார்த்தாள், மரியாள்
   சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள் அவர்களை தடுக்காதீர்கள்.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

(05)

1. இனங்களின் தந்தை
2. - நாட்டை உரிமையாக தருவேன்.
   - பெரிய இனத்தை உருவாக்குவேன்.
   - ஆபிரகாமின் மூலம் அனைத்து மக்களும் ஆசிர்வதிக்கப்படுவர்.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

(06)

1. - மக்களை இறைவனிடம் கூட்டி சேர்த்தல்.
   - இறைவன் வழங்கும் செய்தியை மக்களுக்கு அறிவித்தல்.
2. வாதுமை மரக்கிளை, கொதிக்கும் பானை
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

(07)

1. - ஆடுகளை பசும் புற்தரையில் மேய்த்தல்.
   - கொடிய விலங்குகள் போகாத வண்ணம் பாதுகாத்தல்.
2. - இயேசு தமது மக்களை நோயுடன் காணும் போது சுகத்தை பெற்றுக் கொடுத்தார்.
   - இறை வார்த்தை மூலம் மக்களை போஷித்தார்.
   - பாவிகள் என ஓரம் கட்டப்பட்டவர்களை தேடி கண்டுபிடித்து பாவத்தில் இருந்து மன்னித்து தனது மந்தையில் சேர்த்து கொண்டார்.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank